# தமிழ் வளர்ச்சிக் கழகம்
# செய்தி மின்மடல்

தனிச் சுற்றுக்கு மட்டும் 1:4 செப்டம்பர் 2025

## உங்களுடன்

வணக்கம்.

தமிழ் வளர்ச்சிக் கழகம்
முன்னெடுக்கும் திட்டங்களுக்கு
வருகிற வரவேற்பும் ஆதரவும்
மகிழ்ச்சி தருகின்றது.

அரசியல் பணிகளில்
நேரம்
சூறையாடப்படும் நிலையிலும்
அறக்கட்டளைத் தலைவர் -
மேனாள் ஒன்றிய அமைச்சர்
ஆங்கில இந்து நாளேட்டில்
திரு இராமகிருஷ்ணன்
தமிழ் வளர்ச்சிக் கழகத்தைப் பற்றி
எழுதியிருப்பதைக் கண்டு
மாணவர் பயிற்சித் திட்டம்
'மிகச் சிறந்த முன் முயற்சி' என்று
ஊக்கம் தந்திருக்கிறார்.

காலத் தேவைக்கு ஏற்பக்
கன்னித் தமிழைக்
கணினித் தமிழ் ஆக்கும்
முயற்சிகளில்
உலகத் தமிழர்களின் பங்களிப்பும்
தாயகத் தமிழர்களின்
உழைப்பும் ஒத்துழைப்பும்
வியக்கும்படி இருக்கின்றன.
ஆனாலும்
ஒவ்வொரு நாளும்
தொழில் நுட்பத் தலைமுறைகள்
உருவாகி வருவதால்
இப்போதைய தேவைக்குத்
தமிழை
இணையத் தமிழாக்க வேண்டும்;
செய்யறிவுத் தொழில் நுட்பத்துக்குப்
புரியும்படி தமிழை
இணையத் தமிழ் ஆக்க வேண்டும்!
சுவடித் தமிழை
அச்சுத்தமிழ் ஆக்கியதைப் போலக்
கணினித் தமிழைச்
செய்யறிவுத் தொழில் நுட்பம்
கற்றுக்கொள்ளும் தமிழாக்க வேண்டும்.

இது
கருவிகளுக்குத் தமிழைக்
கற்றுத்தர வேண்டிய
காலம்!
கருவிகளுக்குத்
தமிழைக்
கற்றுக்
கொடுத்துவிட்டால்
காலா காலத்துக்கும்
கருவிகள்
தமிழைத்
தலைமுறைகளுக்குக்
கற்றுக் கொடுக்கும்.
அதற்கான
முன்னெடுப்பு
அங்கங்கே தலையெடுத்தாலும்
தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்
இருப்புக்கான பொறுப்பை ஏற்று
செம்மொழி நிறுவனத்துடனும்
விக்கி நிறுவனத்துடனும் இணைந்து
மாணவர்களை ஈடுபடுத்தப்
பயிற்சி அளிக்கத்
திட்டமிடப்பட்டுள்ளது.


The Hindu-10.09.2025

Academy takes up project to make Tamil content AI-searchable

T. Ramakrishnan
CHENNAI

There is no dearth of Tamil content on the internet but virtually negligible volume is searchable matter as it evades Artificial Intelligence (AI) algorithm, unlike in the case of English. To address this gap, the Tamil Valarchi Kazhagam (Tamil Academy), a non-governmental body of scholars, has taken up a

The Academy was established by T.S. Avinashilingam Chettiar.

அக்டோபரில் பயிற்சி தரவும்
பயிற்சி பெறவுள்ள
மாணவர்களின் தகுதி குறித்தும்
பயிற்சிக் காலம் குறித்தும்
முடிவெடுக்கச்
செம்மொழி இயக்குநர் மற்றும்
பேராசிரியர்கள் வ. ஜெயதேவன்,
நல்லூர் சரவணன்.
இணையத் தொழில் நுட்ப வல்லுநர்களின்
கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.

மேலும்
புதிய புதிய திட்டங்களின் வருகை
தமிழ் வளர்ச்சிக்கழகப் பணிகளில்
வெளிப்படும் நம்பிக்கையைத்
தெரிவிப்பதோடு
தமிழ் வளர்ச்சிக்கழகம்
மேற்கொள்ள வேண்டிய
பயணத்தையும் காட்டுகிறது
தொடர்வோம்...

நன்றி.
- ம.ரா.

# அணியியல் களஞ்சியம்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் உவம வியல், செய்யுளியல் ஆகியவை முறையே அணியிலக்கணமும் யாப்பிலக்கணமும் பேசு கின்றன. அணியியலுக்குத் தொல்காப்பியமே தோற்றுவாய் செய்தது.

தொல்காப்பியருக்குப் பிந்தைய காலத்தில் தொல்காப்பியத்தின் விரிவாய் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனும் ஐந்திக்கண மரபு தோன்றியது. அணியியலைப் பகுதியாகக் கொண்டும் (வீரசோழியம், இலக்கண விளக் கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம்), தனியே முழுமையாகக் கொண்டும் (தண்டி யலங்காரம், மாறனலங்காரம், சந்திராலோகம், குவலயானந்தம்) இலக்கண நூல்கள் பற்பல எழுந்தன. நிகண்டுகளிலும் அணியியல் செய்தி கள் உள்ளன.

ஓரணியின் வகைகளாகக் கருதப்பட்ட சில அணிகள் நாளடைவில் தனி அணிகளானமை யும், நுண்ணிய வேறுபாடுகளின் காரணமாக அணிநூலார் அவற்றை வெவ்வேறு அணிக ளாகக் கருதியமையும், வடமொழி இலக்கணச் செல்வாக்கும் அணிகளின் பெருக்கத்திற்கு அடிப்படையாயின.

இந்நிலையில் சொல்லணிகள், பொருளணிகள், உவம உருபுகள், உவமானம், உவமேயம் உள் ளிட்ட அணியிலக்கணம் குறித்த செய்திகள் முழுவதையும் உள்ளடக்கிய அணியியல் களஞ்சியம் மிகவும் தேவையானது; இன்றி யமையாதது.

அணியியல் களஞ்சியத் திட்டம் பின்வரும் நோக்கங்களை உடையதாகும்:

- தமிழ் பயிலும் மாணவர்கட்கும் ஆய்வாளர் கட்கும் நோக்குநூலாகப் பயன்படுதல்.
- படைப்பாற்றலை மேம்படுத்தும் கருவி நூலாக உதவுதல்.
- இலக்கியப் படைப்புகளிலும் சொற்பொழிவு களிலும் அணிகளை ஆளும் திறனை மேம்படுத்த உறுதுணை புரிதல்.
- இலக்கியங்களை வாசிப்போர் முருகியல் இன்பம் (aesthetic pleasure) எய்த வழிகோலு தல்.
- தமிழ் மொழி, இலக்கிய வளர்ச்சிக்குத் துணைநிற்றல்.

பொதுவாகப் பதிவு ஒன்று, தலைப்புச்சொல், வரையறை, விளக்கம், எடுத்துக்காட்டு, சான் றாதாரம் என்னும் கூறுகள் கொண்டதாக அமையும்.

பேராசிரியர் வ. ஜெயதேவன் அவர்களின் மேற் பார்வையிலும் வழிகாட்டலிலும் சென்னை ஸ்ரீ கிருட்டிணசுவாமி மகளிர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் கி. காவேரி அவர்களின் பொறுப்பில் இத்திட்டம் செயற்படவுள்ளது.





தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பதிப்பாசிரியராக 15 ஆண்டு களும் செயலாளராக ஏறத்தாழ ஓராண்டும் சிறப்புறப் பணி புரிந்துவந்த முனைவர் பெ. அர்த்தநாரீசுவரன் அவர்கள் மருத்துவர் அறிவுரைப்படி ஓய் வெடுக்க வேண்டிய சூழலில் அவரது விருப்பத்திற் கிணங்க 2025 ஆகஸ்டு 31 மாலை முதல் தமிழ் வளர்ச்சிக் கழகப் பொறுப்புகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். அவர் விரைவில் முழு நலம் பெறத் தமிழ் வளர்ச்சிக் கழகம் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

# சொல் புதிது – 4

26.08.2025ஆம் நாள் நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பெற்ற தமிழ்ச் சொற்களின் பட்டியல்:

| வ.எண் | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|
| 1 | Angiogram | குருதிநாளப் பதிவு |
| 2 | Approver | குற்ற ஏற்பாளர் |
| 3 | Bollywood | இந்தித் திரையுலகம் |
| 4 | Container/Tanker truck/lorry | கொள்கலன் உந்து |
| 5 | Department of Food Process Engineering | உணவுப்பொருள் பதனீட்டுப் பொறியியல் துறை |
| 6 | Department of Food Process Technology | உணவுப்பொருள் பதனீட்டுத் தொழில்நுட்பவியல்துறை |
| 7 | Department of Food Safety and Quality Assurance | உணவுப்பொருள் பாதுகாப்பு-தர உறுதிப்பாட்டியல் துறை |
| 8 | Department of Food Plant Operations, Incubation and Entrepreneurship | உணவுப்பொருள் ஆலைச் செயற்பாடு, வளர்த்தெடுப்பு-தொழில்முனைவுத் துறை |
| 9 | Department of Food Packaging and Storage Technology | உணவுப்பொருள் கட்டகம்-வைப்பகத் தொழில்நுட்பவியல் துறை |
| 10 | Department of Food Business Management | உணவுப்பொருள் வணிக மேலாண்மையியல் துறை |
| 11 | Heroism | வீரப்பாடு/வீரத்தனம் |
| 12 | Hollywood | அமெரிக்கத் திரையுலகம் |
| 13 | Kollywood | தமிழ்த் திரையுலகம் |
| 14 | OTP | ஒருநேரக் கடவி |
| 15 | Parole | காலப்பிணை |
| 16 | Passive income | நிழல் வருமானம் |
| 17 | Patient | மருத்துவப் பயனாளி |
| 18 | Podcast | வலையொலி |
| 19 | Premium | உயர்தரம்/சிறப்பு நிலை |
| 20 | Rowdyism | போக்கிலித்தனம் |
| 21 | Smart card | திறன் அட்டை |
| 22 | Smart speaker | திறன் ஒலிபெருக்கி |
| 23 | Start up | புத்தாக்கம் |
| 24 | Stent | செய்நாளம் |
| 25 | Stylist | எழிலாக்குநர் |
| 26 | Tatkal | உடனடி |
| 27 | Techpreneur | தொழில்நுட்ப முனைவோர் |
| 28 | Theme music | உரிப்பொருள்/கருப்பொருள் இசை |
| 29 | Theme park | பொருண்மைப் பூங்கா |
| 30 | Tips | தூண்டல் |
| 31 | Travelpreneur | பயணத் தொழில்முனைவோர் |
| 32 | Trending | பேசுபொருள்/போக்குநிலை |
| 33 | Trilemma | மும்முனை ஊசலாட்டம் |
| 34 | Tubeless tyre | காற்றடை வட்டை |
| 35 | Update | புதிதாக்கம் |
| 36 | Up-to-date | இற்றைநிலை |
| 37 | Valet parking | ஊர்தி நிறுத்த உதவி |
| 38 | Vibe coding | உணர்நிலைக் குறியாக்கம் |
| 39 | Validity | செல்லுபடி |
| 40 | Water bell | குடிநீர் மணி |
| 41 | WiFi | அருகலை |

இவ்வாறு தமிழில் உருவாக்க வேண்டிய ஆங்கிலச் சொற்கள் வரவேற்கப்படுகின்றன. ஆர்வம் கொண்டோர் தமிழ் வளர்ச்சிக் கழக மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.

# பாராட்டு



தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பொதுக்குழு உறுப்பினரும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறைத் தலைவருமான பேராசிரியர் ய. மணிகண்டன் அவர்கள் வகுப்பறையில் சமத்துவத்தை ஊக்குவித்ததற்காக மணற்கேணி ஆய்விதழின் 2025ஆம் ஆண்டுக்கான ***நிகரி*** விருது பெறுகிறார். அவருக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகம் மகிழ்ச்சியையும் பாராட்டையும் நல்வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறது.



சென்னை இராணிமேரி கல்லூரியின் தமிழ்த்துறை, கலைஞர் தமிழ் ஆய்வு இருக்கை, திருவையாறு தமிழ் ஐயா கல்விக்கழகம், ஔவை அறக்கட்டளை இணைந்து 15.09.2025 திங்கள்கிழமை சென்னை இராணிமேரி கல்லூரி, வேலுநாச்சியார் அரங்கத்தில் நடத்திய 117ஆவது அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவில் மேனாள் மாநிலத் தகவல் ஆணையரும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் அறங்காவல் குழு உறுப்பினருமான திருமதி முனைவர் சாரதாநம்பி ஆரூரன் அவர்கள் சிறந்த நாவன்மையாளருக்கான ***அறிஞர் அண்ணா விருது*** பெற்றுள்ளார். அவருக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகம் மகிழ்ச்சியையும் பாராட்டையும் நல்வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

சென்னைக் கம்பன் கழகப் பொன் விழா நிறைவு 08–08–2025இல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் தமிழ் வளர்ச்சிக் கழகப் பொதுக் குழு உறுப்பினரும் தமிழ்ப் பல்கலைக் கழக இலக்கியத் துறையின் மேனாள் தலைவருமான பேராசிரியர் க.திலகவதி அவர்கள் ***திருமதி சி.எம்.பிரேமகுமாரி அறக்கட்டளைப் பரிசில்*** பெற்றுள்ளார். அவருக்குத் தமிழ் வளர்ச்சிக் கழகம் மகிழ்ச்சியையும் பாராட்டையும் நல்வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறது.





## நூல் விற்பனை (50% கழிவுடன்)

தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள அனைத்து நூல்களும் 50% சிறப்புக் கழிவுடன் விற்பனை செய்யப்படுகின்றன.

தொடர்புக்கு:

**தமிழ் வளர்ச்சிக் கழகம்**

**மணிக்கூண்டுக் கட்டடம், சென்னைப் பல்கலைக்கழக வளாகம், சேப்பாக்கம், சென்னை 600 005**

**தொலைபேசி: 044-25365440 இணைய வலைத்தளம்: www.tamilvk.org**

**மின்னஞ்சல்: tamilvalarchikazhagam2024@gmail.com**